REGD. No. M 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 272

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: சித்திரை 17உ வியாழன் (29—4—54) ★ ★ ★ வெளியூர்: சித்திரை 18உ வெள்ளி (30—4—54)

விடுதலைப் போருக்கு அழைப்பு

'வீரரே! விவேகிகளே! வாரீர்'

தாயகத்தை மீட்க வேண்டும்

மு. கருணாநிதி முரசொலி

"முதல் நாள் தந்தை—மறுநாள் உடன் பிறந்தான்—பிறகு கட்டிய கணவன்—அனைவருமே குருதி மழையிலே புதைந்து போனார்கள்! கடைசியிலே ஓரே மகன்—பனிரண்டு வயது சிறுவன் மட்டுமே பாக்கி நிற்கிறான், குடும்பத்தின் ஆணை! அந்தப் பால் மணம் மாறா பாலகனையும் பக்கத்திலே அழைக்கிறாள் தாய்! கையிலே வேல் கொடுத்து 'செருமுகம் நோக்கிச் செல்லடா' என்று அனுப்பினாளாம்! அத்தகைய புறநானூறு சொல்லும் தாய்க் குலமே! உன்னைப் பார்த்து திராவிட முன்னேற்றக் கழகம் கேட்பதெல்லாம் வீட்டிற்கொரு பிள்ளையை விடுதலைப் போராட்டத்திற்கு அனுப்பு என்றுதான்!"

"மாணவத் தோழர்களே! திராவிட முன்னேற்றக் கழகம் உங்களையும் அழைக்கிறது. எப்படி? போராட்டத்திலே குதியுங்கள் என்றல்ல! கவனியுங்கள்—ஆனால், இரண்டறக் கலந்துவிடாதீர்கள் என்று! ஏன்? உங்களுடைய இன்றைய பருவம் படிக்க வேண்டிய பருவம்—பக்குவப்பட வேண்டிய பருவம்! ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தை மட்டுமல்ல; மற்ற மற்றக் கட்சிகளையும், நாட்டின் நடைமுறை நிகழ்ச்சிகளையும் கவனிக்க வேண்டும்; சிந்திக்க வேண்டும்; அதுவும் ஒதுங்கியிருந்து சிந்திக்க வேண்டும். படிப்பைப் பாழாக்கிவிடக் கூடாது! விழலுக்கிறைத்த நீராக்கிவிடக் கூடாது."

—இவ்வாறு தோழர் மு. கருணாநிதி அவர்கள் 25—4—54 அன்று மாதவரம் தி. மு. கழக சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசினார். புழல், கொடுங்கையூர் தி. மு. கழகத்தவரால் அவருக்கு வாழ்த்திதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

கூட்டத்திற்குத் தோழர் மா. இரா. இளங்கோ தலைமை தாங்கினார். தோழர்கள் கோ. இராஜ ஜெபகரன், வேதாசலம், தென்னரசு, கே. எம். கண்ணபிரான் ஆகியோர்கள் பேசினர்.

தோழர் கருணாநிதி அவர்கள் மேலும் பேசியதாவது:—

பெரியோர்களே! ஆண்டாண்டு காலம் அடிமையாக வாழ்வு நடத்தினீர்கள் நீங்கள்! வேண்டாத வேற்று நாட்டானின் ஆதிக்கத்தின் கீழ் அல்லல் பெற்றிருந்தீர்கள்! உங்களுடைய பாட்டன்மார்கள் ஆரிய மாயையிடம் அடிமையானார்கள்! ஆனால், நினைத்துப் பார்க்க வேண்டுகிறேன், உங்களது பாட்டனுக்கும் பாட்டன்மார்கள் எப்படி வாழ்ந்தார்கள்? சேரனும், சோழனும், பாண்டியனும் நாடாண்ட நேரத்திலே—சுதந்திர பூமியிலே வாழ்ந்தார்கள்! அவர்களது பரம்பரையிலே வந்த நாமோ இன்று வாழும் நிலை என்ன? அடிமைகளாக—தொழும்பர்களாக—பொட்டுப் பூச்சிகளாக உலவுகிறோம்! ஏன்? ஏன் இந்த நிலை? எவனெவனோ வருகிறான்—ஏதேதோ பேசுகிறான்—அடக்குமுறைகளை வீசுகிறான்—ஏன்?

பெரியோர்களே! சாகப் போகும் வயது உங்களுடையது! வாலிபப் பருவத்தை கடந்துவிட்ட வயது மகனின் மணம் கண்டு—அவனது குடும்பத்தின் சுக வாழ்வு கண்டு—உங்களுக்கு ஒரு பேரனையும் கண்டுவிட்ட வயது! இனி மண்தான் உங்களுக்குச் சொந்தம். உங்களது குறுகிய வாழ்வு காலத்திலே—நீங்கள் செய்யப் போகும் தொண்டு என்ன? அடிமை நாட்டிலே வாழ்ந்தீர்கள்—சுதந்திர நாட்டிலே சாகக் கூடாதா? உங்கள் சவம் எரிக்கப்படும் மண் சுதந்திர மண்ணாக இருக்கக்கூடாதா?

(4-ம் பக்கம் பார்க்க)

'பஜகோவிந்தர்' பழிதீர்க்கப்படுகிறார்!

மழை பெய்ய வைக்க விஞ்ஞான முறை

ஆஸ்திரேலியா சென்று அறிந்துவர ஏற்பாடு

"மழை இல்லையா? ஏன் கஷ்டப்படுகிறீர்கள்? பஜகோவிந்தம் பாடுங்கள், மழை பொழியும்," என்று, ஆச்சாரியார் சொல்லிவந்தாரல்லவா, மந்திரியாக இருக்கும்போது எதையும் சொல்லலாம் என்ற எண்ணத்தில்!

"மகான் வந்தார் மழை பொழிந்தது," என்று, 'கல்கி' பூஜை செய்தது!

கண்ட கண்ட இடத்திலெல்லாம், "பஜனை செய்தால் மழை வரும்," என்று பேசப்பட்டது!

இந்த அமத்தத்தை கேலி செய்வதுபோல, பஜகோவிந்தர் மீது பழி தீர்த்துக்கொள்வது போல, இந்திய சர்க்கார், விஞ்ஞான முறையில் மழையைப் பொழிய வைக்க முடியும் என்ற எண்ணத்தை ஏற்றுக்கொண்டு, அதற்கான ஏற்பாடு செய்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவுக்கு, இந்திய விஞ்ஞானியை அனுப்பி, இது சம்பந்தமான பயிற்சி பெற, ஏற்பாடு செய்திருப்பதாக இயற்கை வளம், விஞ்ஞான ஆராய்ச்சி இலாகா துணை அமைச்சர் கே. டி. மாளவ்யா, டெல்லி மேல்சபையில் ஏப். 27-ல் தெரிவித்திருக்கிறார்.

மக்கள் தொகைப் பெருக்கம்!

உணவு உற்பத்தி பெருகவில்லை

லண்டன், ஏப். 28—

அடுத்த 30 வருடத்தில் அதிகமாகிற உலக மக்களின் எண்ணிக்கை, 1900 ஆண்டில் இருந்த உலக மக்களின் மொத்த எண்ணிக்கைக்குச் சமமானதாக இருக்கும்.

இங்கிலாந்தில் உள்ள ஒரு தனிப்பட்ட ஸ்தாபனமான, அரசியல் பொருளாதாரத் திட்டக் குழு ஒன்று வெளியிட்டுள்ள குறிப்பில், மேலும், "வளர்ந்து வரும் மக்கள் தொகைக்குத் தகுந்த மாதிரி, உணவு உற்பத்தியும் பெருகி வருகிறதென்று நம்புவதற்கில்லை." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஜின்னாவுக்கு இழைக்கும் மாபெரும் துரோகம்!"

(:)

பிரெஞ்சு துருப்புகளுக்கு இடம் தந்ததுபற்றி கண்டனம்

பாக். மக்கள் சபையில் எதிரொலி

கராச்சி, ஏப். 27—

பிரெஞ்சு துருப்புக்கள், இந்தோ-சீனா செல்லும் வழியில், பாக்கிஸ்தானில் இறங்குவதை எதிர்த்து நேற்று பாக் மக்கள் சபையில் இப்டிகாருதீன் என்பவர் ஒரு ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டு வந்தார். அவர் கொண்டு வந்த பிரேரணையின் சில பகுதிகளை தலைவர் மறைத்து விட்டார், எஞ்சிய பகுதியில் "இந்தோ சீனர்களின் உரிமைக் குரலை ஒடுக்குவதற்காக பிரெஞ்சு ஏகாதிபத்தியம் அனுப்பும் துருப்புகளுக்கு, எங்கள் மண்ணிலே இறங்கத் தங்குவதற்கு அனுமதியை பாக். சர்க்கார் தந்திருப்பதினால், இச்சபை ஒத்திவைக்கப் படுகிறது" என்று கண்டிருந்தது.

இதைப் படிக்கக் கேட்டதும், சபையில் எதிர்ப்புக் குரல்களும் ஆதரிப்புக் குரல்களும் பலமாக எழுந்தன. 'ஏன் இப்படி ஒரு பிரேரணை கொண்டுவந்தேன்' என்பதற்கான காரணங்களைக்கூட இப்டிகாருதீன் சொல்ல அனுமதிக்கப்படவில்லை.

என்றாலும், "இவ்வாறு ஏகாதிபத்தியங்களின் துருப்புகளுக்கு அனுமதி தருவது 1947-ம் ஆண்டிலே, "பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை கோரிப் போரிடும் இந்தோசீன மக்களுக்கு எங்களின் அனுதாபமும் ஆதரவும் என்றும் உண்டு" என்று கூறியுள்ள காலஞ் சென்ற திரு. ஜின்னாவின் புனிதவாக்கிற்கு இழைக்கப்படும், "வெட்கமற்ற துரோகச் செயலா"கும் என்ற வார்த்தைகள் திரு. இப்டி

இந்துக்களுக்குத் தூபம்!

கோவாவில் போர்ச்சுகல் தந்திரம்

போர்ச்சுகல் பிடியிலுள்ள 'கோவா' விடுதலைக் கிளர்ச்சி நடத்துவதை அழிக்க, போர்ச்சுகீசிய சர்க்கார் இப்போது ஒரு தந்திர முறையைக் கையாள்கிறார்கள் கோவாவிலுள்ள இந்துக்களை சரிப்படுத்தினால் கிளர்ச்சியை ஒழித்துவிடலாம் என்று கருதுகிறார்கள் இதற்காக கோவாவில் உள்ள ஸ்மார்த்த, வைஷ்ணவ மதத் தலைவர்களுக்குப் புதுச் சலுகைகள் கொடுக்கிறார்கள்.

இனி இந்த மதத் தலைவர்கள் மதக் காரியத்துக்காக வரவழைக்கும் சாமான்களுக்கு வரிபோட மாட்டார்களாம்!

இந்தச் சலுகை கொடுத்து மதத் தலைவர்களைச் சரிப்படுத்திக் கொண்டு அவர்கள் மூலம் இந்துக்களை, தமது வழிவிக்கச் செய்யலாம் என்று போர்ச்சுகீசு சர்க்கார் கருதுகிறது.

ஒன்று சேர்கின்றனர்!

சென்னை, ஏப். 27—

செங்கற்பட்டு மாவட்டக் குழுக் கூட்டம் சைதையில் நேற்று மாவட்டக் கலெக்டர் திரு. வி. நி. முத்திருளாண்டி தலைமையில் நடைபெற்றபோது, செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள எல்லா போர்டு ஆரம்பப் பள்ளிகளையும் இந்தப் பள்ளிகளுடன் இணைத்து விடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

காருதீன் காதுகளிலே விழுமில்லை.

சியாங்கேஷேக் பட்ட கடன்

திரும்பப் பெற இந்தியா முயற்சி

புதுடில்லி, ஏப். 27—

சென்ற உலகப் பெரும் போரின் போதும் அதற்கு முன்பும் இந்தியாவிடமிருந்து சைனாவின் முன்னாளைய அரசாங்கம் (சியாங்—கே ஷேக் ஆட்சி) பெற்றிருந்த சுமார் ரூ 10 லட்சம் கடனைத் திரும்பப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொண்டிருப்பதாக, உதவி நிதி மந்திரி இன்று மக்கள் சபையில் அறிவித்தார். பீகிங்கில் உள்ள இந்தியத் தூதுவர் மூலமாயும், இங்குள்ள செஞ்சீனத் தூதுவர் மூலமாயும், செஞ்சீன அரசாங்கத்திடம் மேற்படி கடனைத் திரும்பப் பெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இதுபோது, தோழர் சுந்தரய்யா (கம்யூனிஸ்ட்) "பார்மோசா, செஞ்சீனாவின் ஆளுகைக் குட்பட்டது தான் என்பதை இந்தியா ஏற்றுக் கொண்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன்." என்று கேட்டதற்கு இந்தப் பிரச்னை இங்கே எழவில்லை எனத் தலைவர் அறிவித்தார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 29—4—54 வியாழன்

ஐவர் மாநாடு!

கொரிய இணைப்பையும், இந்தோ-சீன எதிர்காலத்தையும் ஆராய்ந்து முடிவு காண ஜெனிவாவில், அணுகுண்டு, நீர்வளிக் குண்டு பேரரசுகள் ஒன்று கூடியுள்ளன. அதே நேரத்தில், சாதாரண நாட்டு வெடிகுண்டில் நம்பிக்கை வைத்துள்ள இந்தியா, பாகிஸ்தான், சிலோன், பர்மா, இந்தோனேஷ்யா ஆகிய ஐந்து நாட்டின் பிரதமர்கள், கொழும்புவில் கூடியுள்ளனர்.

உலக மக்களின் நினைவை பெரிய அளவில் ஜெனிவா மாநாடு கவர்ந்துவிட்டிருப்பதால், கொழும்பு நகரில் கூடியுள்ள இந்த ஐந்து நாட்டுப் பிரதமர்களின் மாநாட்டிற்கு இருக்க வேண்டிய அளவிற்கு, உலக மக்களின் கண்ணோட்டம் இருக்க முடியாது. எனவே இம்மாநாட்டில் ஏற்படும் முடிவின் பலனாக, எத்தகைய புதிய நிலை உலகில் ஏற்படுவதாக இருந்தாலும், மாநாட்டிற்குக் கிடைத்துத் தீரவேண்டிய அளவிற்கு விளம்பரம் கிடைக்காது என்பது நிச்சயம். இதை, மாநாட்டிற்கு ஏற்பட்ட முதல் தோல்வியாகக் கொள்ளுவது தவறுடையதாகாது.

பேரரசுகளின் அரசியல், பொருளாதாரப் பிடியிலிருந்து, ஆசியப் பகுதிகளை நிரந்தரமாக, நிலையாக விடுவிக்க வேண்டுமென்பதுதான் மாநாட்டின் முடிந்த நோக்கம் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. பேரரசுகளின் உதவி இல்லாமலே, ஆசியப் பகுதிகளின் செல்வப் பெருக்கத்திற்கு தங்களுக்குள்ளாக ஏற்பாடு செய்துகொள்ள வேண்டுமென்பதும் பணிகளில் ஒன்றாக மாநாடு கொண்டிருக்கிறது.

ஆசிய நாடுகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பொறுப்பு, கொழும்புவில் கூடியுள்ள ஐந்து நாடுகளுக்கு மட்டுந்தான் உண்டா, மற்ற ஆசிய நாடுகளுக்கும் உண்டா என்ற கேள்வி எழுவது நியாயமேயாகும். இதற்கு பதில் காணுவதற்கு முன், கூடியுள்ள ஐந்து நாடுகளும் மேற்கூறிய இரண்டு கோட்பாடுகளையும், தங்கள் தங்கள் சொந்த விஷயத்தில் எப்படி அனுசரித்து வருகின்றன என்பது ஆராயப்பட வேண்டும்.

அமெரிக்காவின் பொருளாதார இராணுவப் பிடிப்பு பாகிஸ்தானில் ஊடுருவிப் போயிருக்கிறது என்பது வெளிப்படை உண்மை. இந்தியாவும் இதை அடிக்கடி சுட்டிக் காட்டி எச்சரிக்கை விடுத்தவண்ணம் இருந்து வருகிறது.

அதுபோலவே, இந்தியாவின் நிலையும் இருந்துவருகிறது எனக் கூறுவது பொய்யல்ல. பாகிஸ்தான் போன்று இந்தியா வேண்டுமானால் இராணுவ ஒப்பந்தம் ஒன்றை அமெரிக்காவுடன் செய்து கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் பொருளாதாரத் துறையில், பாகிஸ்தானைக் காட்டிலும், தனது நிலைக்கேற்ப இந்தியா பல மடங்கு, பிரிட்டிஷ் மூலதனத்திற்கும், அமெரிக்க மூலதனத்திற்கும் ஆட்பட்டுக் கிடக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். தனக்கு வேண்டிய தொழில், இராணுவ சாதனங்கள் அனைத்திற்கும், அமெரிக்காவையும், பிரிட்டனையும் எதிர்பார்த்து கிடக்கிற இந்தியா, பேரரசுகளின் பிடியிலிருந்து ஆசிய நாடுகளை விடுவிப்போம் எனப் பேசுவது, கேலிக்குரியதாக இல்லையானாலும், முரண்பாடு உடையதாகும் என்பதில் ஐயமில்லை.

சிலோன் நிலையும், இரு நாடுகளின் நிலைமைக்கு மாறுபட்டு இருக்கவில்லை. பிரிட்டிஷ் முடியின் குடை நிழலில்தான் சிலோன் அரசியல் உரிமை பெற்று வாழ்கிறதை யாரே மறப்பர். பிரிட்டிஷ் மூலதனப் பிடிப்பில் சிக்கி இலங்கையின் செல்வநிலை சீரழிந்து கொண்டுதான் இன்னமும் இருக்கிறது.

பர்மாவின் நிலை பற்றிச் சொல்லவே தேவை இல்லை; அதன் ஆட்சிபீடமே ஆடிக்கொண்டுதான் இருக்கிறது; கரேன்கள் கலகம் தணிவதும், தலைதூக்குவதுமாக இருக்கிறது; சியாங்-கே-ஷேக்கின் சார்பு சீனர் கொடுக்கும் தொல்லை குறைந்தபாடில்லை. அரசியலில்தான் பிரிட்டன் பிடி தளர்ந்ததேயல்லாது பொருளாதாரப் பிடி இன்னமும் பர்மாவை விட்டு அறவே நீங்கிவிடவில்லை.

மற்றொரு ஆசிய நாடான இந்தோனேஷியாவின் நிலை, அந்த நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையைப் போல இனிமைதருவதாக இல்லை. எல்லாத் துறைகளிலும் குழப்பமயம். டச்சு நாட்டின் பொருளாதாரப் பிடிப்பும், அமெரிக்கப் பொருளாதாரப் பிடிப்பும் இன்னமும் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

மேல்நாட்டு ஏகாதிபத்தியங்களால் பூட்டப்பட்டிருந்த அரசியல் அடிமை விலங்குகள்தான் அறுத்தெறியப்பட்டனவே ஒழிய, ஏற்கனவே பூட்டப்பட்டிருந்த பொருளாதார விலங்குகள் இப்பொழுதும் வலிமை குன்றாமல் இருந்துதான் வருகின்றன. இத்தகு சூழ்நிலையில் உள்ள சுதந்திர அரசுகள் எழுப்பும் உரிமை கீதம் செவிக்கு மட்டுமே இன்பமூட்டக்கூடியதாகும்.

ஆசியப் பகுதியைப் பற்றி இந்த ஐந்து நாடுகளும் நிறைவேற்றும் தீர்மானம், நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமா, இல்லையா என்பதும், அத்தீர்மானங்களைப் பேரரசுகள் மதித்து நடக்க முன்வருமா வராதா என்பதும் ஒரு பக்கம் இருக்க, இவைகளுக்குள்ளாக ஏதாவது சிக்கல் இல்லாமல் இருக்கிறதா, அப்படி ஏதாவது சிக்கல் இருக்குமானால் அவைகளைத் தீர்த்துக்கொள்ள இவைகளுக்கு மனமிருக்கிறதா என்பதையும் முதற்கண் சிந்திக்க வேண்டும். இக்கண்ணோட்டத்தோடு பார்க்கும்பொழுது, இந்த ஐந்து நாடுகளுக்கும் உள்ளாகத் தீர்த்துவைக்க வேண்டிய சிக்கல் மிகப் பிணக்கு இருக்கத்தான் இருக்கிறது.

ஆசியப் பகுதியை விட்டு பேரரசுகளை விரட்டுவோம், துரத்துவோம் எனப் பகட்டாகப் பேசி, ஆடம்பரமானத் தீர்மானம் போட்டு மகிழ்ச்சி காண முனைந்திருப்பதைக் காட்டிலும், தங்களுக்குள்ளாக இருந்துவரும் சிக்கலை உடனடியாகத் தீர்த்துக் கொள்வதில் முயற்சி எடுத்துக்கொண்டு இருக்குமானால், அது எவ்வளவோ சொந்தத்தில் நன்மை பயக்கக்கூடியதாகும். அது போற்றிப் பாராட்டத்தக்கதும் ஆகும்.

அதனால், தங்களுக்குள்ளாக இருந்துவரும் அசைக்க முடியாத அடிப்படை ஒற்றுமையை, பேரரசுகளுக்குக் காட்டிக் கொண்டதாகும். அதைக் கண்டு பேரரசு மதித்து நடக்கவும் மனமொப்பும். மற்ற ஆசிய நாடுகளும், ஐந்து நாடுகளுடன் ஒன்றுபட்டு ஆசியாவின் உரிமையைத் தாங்கி நிற்க முன்வரும்.

அதை விட்டுவிட்டு, ஒன்றை ஒன்று உல்லுறா பகைத்துக் கொண்டு, உதட்டளவு உறவு கொண்டாடி, கொழும்புவில் கூடி, ஆசியாவிற்கே வழி காட்ட முன் வந்திருப்பது, வேடிக்கையானது அல்ல, வேதனைதரும் காட்சியாகும்!

லயோலா நகர் ரயில்வே நிலையம்

புதுடில்லி, ஏப் 28—

தென்பிராந்திய ரயில்வேயில், சென்னை மாநிலத்தில் லயோலா நகர் என்ற இடத்தில் புதிதாக ரயில்வே நிலையம் ஒன்றை ஏற்படுத்த ரயில்வே போர்டு அனுமதியளித்திருக்கிறது. இந்த நிலையம் சேத்துப்பட்டுக்கும்—கோடம்பாக்கத்துக்கு மிடையே ஏற்படுத்தப்படும்.

லயோலாநகர் ரயில்வே ஸ்டேஷனை நிறுவ சுமார் 3,25,000 ரூபாய் மூலதனச் செலவு செய்ய வேண்டியிருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேசியத் திட்டக் கடன்

புதுடில்லி, ஏப். 28—

3½ சதவிகித தேசியத் திட்டக் கடனுக்கு (1954), ஏப்ரல் 19-ந் தேதியிலிருந்து 24-ந் தேதி வரையுள்ள காலத்தில், மொத்தம் சுமார் ரூ 31,50,00,000 ரூபாய் வரை வசூலாகியிருப்பதாக இதுவரை கிடைத்துள்ள தகவல்களிலிருந்து தெரிய வருகிறது.

களம்பூரில் தி. மு. கழகத் தோழர்கள் எழுவர் கைது

போலீஸ் அடக்குமுறை தீவிரமாகிறது!

களம்பூர், ஏப். 29—

களம்பூரில் போலீசு அடக்குமுறையைக் கண்டித்து திருச்சியில் கூடிய பொதுக்குழு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அதையொட்டி வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழகம், மாவட்டங்களிலுள்ள கிளைக் கழகங்கள், அடக்குமுறையைக் கண்டித்து கண்டன தினம் நடைபெறும்படி கோரப்பட்டதற்கேற்ப எல்லாக் கிளைக் கழகங்களும் கண்டன நாள் கூட்டி, தங்கள் கண்டனங்களை அரசாங்கத்திற்குத் தெரிவித்தும் இருக்கின்றன. ஆனால், போலீஸ் தங்கள் அடக்குமுறையைத் தொடர்ந்து நடத்துகிறது.

தோழர்கள் டி. ஜி தங்கவேலு, கே. என். சிவநேசன் மற்றும் 5 தோழர்களையும், 110 (இ) (எப்) கி. பி. கோ. பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டு செய்யாறிலுள்ள சப் ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தோழர்களை ஜாமீனில் விடுவிக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

கசையடி தண்டனைக்கு கட்ஜூ சப்பைக்கட்டு!

—— (:) ——

சில குற்றங்களுக்காக அம்முறை அவசியமாம்!

மக்கள் சபையில் எதிர்ப்பு

புதுடில்லி, ஏப் 26—

"சாட்டையடி தண்டனை தருவதையே ஒழித்துவிடலாமா அல்லது அந்த தண்டனையை குறிப்பிட்ட சில குற்றங்களுக்கு மட்டும் தரலாம் என்று வரம்பிடலாமா என சர்க்கார் ஆராய்ந்தது நீதி இலாக்காவினுடையவும், பொது மக்களுடையவும் அபிப்பிராயங்கள், இந்த விஷயத்தில் மாறுபட்டிருந்தன. தகுதி மிக்க நீதி இலாக்கா அதிகாரிகளிடமிருந்து குறிப்பிட்ட சில குற்றங்களுக்கு சாட்டையடி தண்டனை தருவதைக் காட்டிலும் பொருத்தமான வேறு தண்டனைகளில்லை என்று நான் அறிகிறேன்.

"பெண்களிடத்திலும், குழந்தைகளிடத்திலும் ஒழுக்கக் கேடான நிலையில் நடந்து கொள்பவர்களுக்கு பொது இடங்களில் அவர்களை நிறுத்தி சாட்டையடி தருவதுதான் சிறந்த தண்டனை; இது மிகவும் விரிவாக ஆராயப்பட வேண்டிய ஒன்று," என்று மக்கள் சபையில் உள்நாட்டு மந்திரி கட்ஜூ கூறினார்.

சாட்டையடி தண்டனை தரும் சட்டத்தை நீடிக்க வேண்டும் எனக் கோரும் மசோதா கொண்டுவரப்பட்டபோது கம்யூனிஸ்ட் அங்கத்தினரான திரு. சதன் குப்தா, விவசாயத் தொழிலாளர் கட்சி உறுப்பினர் திரு என் எஸ். மூர் ஆகியோர், சாட்டையடி தண்டனை தருவது, மிகவும் தன்புறுத்தத் தக்கதும், காட்டுமிராண்டித் தனமானதுமாகும் என்று எடுத்துக்காட்டி எதிர்த்தனர்.

நீண்டகால ஒழிப்பு

மசோதா போன்றவைகளை விவாதிக்காது ஒத்திவைத்துவிட்டு, இத்தகு சாதாரண மசோதாக்களை விவாதத்திற்கு முதலில் வைப்பதை கண்டித்தும், திரு குப்தா பேசினார்.

பாகுபாடு காட்டாதே!

ஒரு தொழிற்சாலையின் (பாக்டரி) தொழிலாளர் அடிப்படைச் சம்பளம் — விவசாயத் தொழிலாளர் அடிப்படைச் சம்பளம் ஆகியவற்றுக் கிடையேயும், ஆண் தொழிலாளர் — பெண் தொழிலாளர் ஆகியவற்றுக் கிடையேயும் எவ்வித பாகுபாடும் காட்டப்படக் கூடாதென்று பம்பாயிலுள்ள தொழில் அப்பீல் கோர்ட் தீர்ப்பளித்துள்ளது.

தளர்த்தப்படுகின்றன!

புதுடில்லி, ஏப் 28—

"நாடு முழுவதிலும், உணவு தானியங்கள சம்பந்தமான பல முக்கியமான கட்டுப்பாடுகள தளர்த்தப்பட்டு வந்துள்ளபோதிலும், அனேகமாக எல்லா ராஜ்யங்களிலுமே ஏதாவதொரு வகையில், முக்கியமாக அரிசி போக்குவரத்து சம்பந்தமாகக் கட்டுப்பாடுகள் அமுலில் இருந்து வருகின்றன" என்று இந்திய மேல் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளன.

கிளர்ச்சியை ஒடுக்க கீழ்த்தரச் செய்கை?

போர்ச்சுக்கல் ஆதிபத்தியத்தின் கீழ் பம்பாய்க்கு வடக்கே உள்ள டையூவில், பொதுமக்களின் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காக கோவாவிலிருந்து சென்றுள்ள நீக்ரோ படையினர், மக்களிடம் மிருகத்தனமாக நடந்து கொள்வதாகத் தெரிகிறது.

ஆசிய மக்களுக்கு விரோதமாக ஆக்கிரமிப்புக் குழு உருவாவதா?

ஜினிவா, ஏப். 28—

"உலக நெருக்கடியைக் குறைத்து, சமாதானத்தை உறுதிப்படுத்துவதே ஜினிவா மாநாட்டின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்," என்று இங்கு நடைபெறும் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்ட சீன அயல்நாட்டு மந்திரி தொடர்ந்து பேசுகையில் சொன்னதாவது:—

ஆசிய மக்களின் நீண்டகால சுதந்திரப் போராட்டத்தை ஒடுக்க அமெரிக்காவிலுள்ள செல்வாக்கு மிக்க வட்டாரங்கள் முயலுகின்றன; ஆசிய மக்களுக்கு விரோதமாக ஆக்கிரமிப்பு குழு ஒன்று அமைக்க அவர்கள் திட்டமிடுகின்றனர்; அமெரிக்காவின் இக்கொள்கையே, ஆசியாவின் தகராறுகளுக்கும்—நெருக்கடிகளுக்கும் காரணமாகிவிட்டன," என்றார்.

பணியவில்லையாம்!

எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்து, அதன்மீது எவரும் வெற்றி பெற்றிருக்க முடியாது என்று திபேத்தியர்கள் உண்மையாக நம்புவதாகத் தெரிகிறது.

யுத்த பீதியினின்றும் உலகத்தைக் காக்க முயற்சி

—— (:) ——

ஆசியப் பிரதமர்கள் இலங்கையில் கூடி ஆலோசிக்கின்றனர்

காஷ்மீர் பிரச்னையில் பாக் நிலைமை

கொழும்பு ஏப். 28—

"அணுசக்தி ஆயுதங்களைத் தயாரிப்பதில் வைத்தியக் காரத்தனமான போட்டி ஏற்பட்டிருக்கிறது; இந்த நிலைமை நீடிக்குமானால், அது, உலகத்திற்கே பயங்கரமான விளைவை உண்டாக்கிவிடும்; இந்த நிலையில், இங்கு கூடியுள்ள ஐந்து நாடுகளும் இன்னும் நெருக்கமாக ஒத்துழைத்து உலக சமாதானத்தைக் காப்பாற்றுவதற்கு முனைய வேண்டும்,"

—என்று, இந்தியா, இலங்கை, இந்தோனேஷியா, பர்மா, பாகிஸ்தான் ஆகிய ஐந்து தெற்கு ஆசிய நாடுகளின் பிரதம மந்திரிகளின் மாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், இலங்கைப் பிரதமர் சர் ஜான் கொத்தலாவல குறிப்பிட்டார்.

யுத்த பீதியிலிருந்து உலகத்தைக் காப்பாற்றுவதற்கு ஏதாவது வழி கண்டுபிடிக்க வேண்டுமென்ற நம்பிக்கையுடன் ஆசியப் பிரதமர்கள் இங்கு கூடியுள்ளனர். ஜெனீவாவில் நடைபெறும் வல்லரசுகளின் மாநாட்டைப் போலவே, இம்மாநாடும் முக்கியமானதென்று குறிப்பிடப்படுகிறது.

மாநாட்டின் அவகத்தில், "உலக சமாதானத்துக்குப் பேராபத்தாக இருப்பது காஷ்மீர் பிரச்னைதான் என்றும், அதைப் பைசல் செய்யாமல் இந்தோ—சீனு பற்றி விவாதிப்பது அர்த்தமற்றது," என்றும் பாக் பிரதமர் கூறிவிட்டு தொடர்ந்து பேசியதாவது:—

"ஏழு ஆண்டுகளாக காஷ்மீரின் 40 லட்சம் மக்கள் சுயநிர்ணய உரிமை இல்லாமலிருக்கிறார்கள்; இத்தகராறு தீர்க்கப்படாத வரையில், மற்ற காரணங்களுக்காக இங்கு வந்துள்ள நாடுகளிடையே உள்ள மனக்கசப்பு போக்கப்படாத வரையில், நம்மிடையே சுமுகமான நம்பிக்கை ஏற்படுமென்று நினைப்பது தவறாகும். இது நீராதிருக்கையில், மற்றவர்களுக்கு சமாதானத்தைப் பற்றி பிரசங்கம் செய்வது அதிகப் பிரசங்கித்தனமே.

"அதேபோல, நமக்குள் யுத்த பகிஷ்கார உடன்பாடு வகுப்பதோ, அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் வகுப்பதோ தற்போதுள்ள நிலைமைக்குப் பொருந்தாது.

"சச்சரவுக்கும் மனக் கசப்புக்கும் காரணமாக உள்ள விஷயங்கள் நீடிக்கும்வரை வெறும் யுத்த பகிஷ்கார பிரகடனத்தால் எங்கள் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படாது; இரு நாடுகளும் சமாதானமாக வாழும் என்றோ, வருங் காலத்தில் அவற்றிடையே யுத்தம் மூள்வதற்குக் காரணம் இருக்காது என்றோ இப்பிரகடனம் மூலம் நம்பிக்கை ஏற்படாது," என்றார்.

ஆனால், பாக் பிரதமர் கோரியபடி காஷ்மீர் பிரச்னையை விவாதிக்க மாநாடு மறுத்துவிட்டது.

அவரின் கோரிக்கை பற்றி பிரதமர்களுக்கிடையே விவாதம் நடைபெற்றது.

"பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஆயுத உதவி காரணமாகக் காஷ்மீர் பிரச்னையின் தன்மை மாறிவிட்டது என்றும், அமெரிக்க ஆயுத உதவி பிரச்னையையும் சேர்த்து விவாதிப்பதானால்தான் காஷ்மீர் பற்றி நாம் விவாதிக்க முடியும்," என்றும் நேரு கண்டிப்பாகத் தெரிவித்து விட்டு மேலும் கூறியதாவது:—

"காஷ்மீர் பிரச்னையைவிட அமெரிக்க ஆயுத உதவிதான் யுத்த அபாயத்தை ஏற்படுத்தும்" என்றார்.

மாநாட்டில் அலி நீங்கலாக மற்றவர்கள் இந்தோ-சீனு பற்றி முதலில் விவாதிக்க வேண்டும் என்று கருதியதால் இந்தோ-சீனு பற்றி அர்த்தமுள்ள விவாதம் தொடங்கியது.

இந்தோ-சீனு பற்றி நேரு ஏப். 24-ந் தேதி தெரிவித்த ஆறு அம்ச திட்டத்தைப் பிரதமர்கள் பரிசீலித்தனர்.

"இந்தோ-சீனப் போர் உட்பட இப்பிராந்தியத்தின் சங்கடங்களுக்கெல்லாம் மூல காரணம் சீனப் பிரச்னைதான் என்றும், கம்யூனிஸ்டு சீனாவை ஐ.நா.-வில் அனுமதிக்க மறுப்பதும் தான் சங்கடங்களுக்குக் காரணம் என்றும் இந்தோனேஷியப் பிரதமர் குறிப்பிட்டாராம்.

ஐ.நா.-வில் பீகிங் சர்க்கார் இடம் பெறவேண்டுமே தவிர சியாங் பிரதிநிதி நீடித்திருக்கக் கூடாது என கொழும்பு மாநாடு மேற்கு நாடுகளுக்கு ஒரு பிரகடனம் மூலம் அறிவிக்க வேண்டுமெனப் பிரதமர்கள் ஒப்புக் கொண்டதாகத் தெரிகிறது.

நடக்க இருப்பவை

★

வட சென்னை நடிக மன்ற 5-ம் ஆண்டு விழா

1—5—54 மாலை 4 மணிக்கு, சென்னை, பெத்துநாய்க்கன் பேட்டை (8 வது வட்டம்) வெங்கடப்பர் தெருவில், தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் எஸ். பி. ஆதித்தன் (ஆசிரியர் 'தினத் தந்தி'), வி. என் கோவிந்தராசு, டி. எம். முத்துவேலு (ராங்) ஆகியோர் பேசுவர்.

• • •

குறள் விழா

1—5—54 மாலை 5 மணிக்கு, தென்மாப்பட்டு செந்தமிழ்ப் பொதுநிலைப் பள்ளி முன்னுள்ள திடலில் தோழர் ம. பிலவேந்திரன் தலைமையில் குறள் விழா நடைபெறும். தோழர்கள் சி. இலக்குவனூர், முடியரசன், ச. குழந்தைநாதன், சி. முருகையா அ குருசாமி, கதி சுந்தரம் ஆகியோர் பேசுவர்.

ஜெனீவா மாநாட்டின் புதிய மாறுதல்?

வியட் நாம் கம்யூனிஸ்டுகளும் கலந்து கொள்ள பிரான்ஸ் விருப்பம்

ஜெனீவா, ஏப். 28—

ஜெனீவாவில் நடைபெறுகிற பேரரசுகள் மாநாட்டில், வியட்நாம் எதிர்காலம் பற்றி விவாதிக்க, அங்குள்ள கம்யூனிஸ்டு கட்சியினருக்கும் வாய்ப்பளிக்க வேண்டுமென, பிரான்ஸ் சார்பில் மாநாட்டில் கலந்துகொள்ளும் வெளிநாட்டு மந்திரி பிதால்ட் விரும்புகிறார்.

இதற்காக, வியட்நாமின் மாஜி சக்ரவர்த்தியும், தற்போதைத் தலைவருமான பாவோடாயின் அனுமதியைப் பெறுமாறு, பிரான்சிலுள்ள வெளிநாட்டு இலாகா காரியதரிசியை பிதால்ட் கோரியுள்ளார்.

கவர்னர் மேனுர் கற்பனையே கூட்டாட்சி யோசனை

கூட்டாட்சிக் கருத்துக்குக் குபேர் குழு எதிர்ப்பு

புதுச்சேரி, ஏப் 27—

பிரெஞ்சிந்தியப் பிரதிநிதி குபேர் பின்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்:—

"பிரான்சில் பக்கிரிசாமி பிள்ளையும், துக்கேயும் பிரெஞ்சிந்தியாவில் கூட்டு சர்க்கார் அமைக்கலாம் என்று யோசனை சொன்னதாகவும், அதை பிரெஞ்சு சர்க்கார் ஆதரிப்பதாகவும் ஒரு செய்தி வெளிவந்தது. ஆனால் இந்த யோசனை எப்படி உருவாயிற்று? அதன் மர்மத்தை எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

பிரெஞ்சிந்தியாவில் கவர்னராக இருக்கும் மேனுர்டு இங்கு வருமுன் நியூஹெப்ரிடீஸ் எனும் தீவில் பிரெஞ்சுப் பிரதிநிதியாக இருந்தார்; பிரிட்டனும் பிரான்சும் அங்கு கூட்டுசர்க்கார் நடத்துகின்றன. அதே முறையை இங்கே கையாளப் பார்க்கிறார்.

இங்கே பிரெஞ்சு ஆதிக்கத்தை ஒழிக்க மக்களும், மக்களுடைய பிரதிநிதிகளும் ஏகமனதாக முடிவு செய்துவிட்டனர். எப்படியும் பிரெஞ்சு ஆதிக்கம் வெளியேறித்தான் தீரவேண்டும் என்ற உண்மையை அறிந்து கொண்ட மேனுர்டு கூட்டு சர்க்கார் அமைத்தால் கொஞ்ச காலமாவது பிரெஞ்சு ஆதிக்கத்தை இந்தியாவில் நிலைநிறுத்தலாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

பிரான்சிலிருந்து இங்குள்ள நிலைமையை ஆராயவந்த இன்ஸ்பெக்டர் - ஜெனராலுக்கு, இங்கு பிரான்சுக்கு மக்கள் ஆதரவு உண்டு என்பதை தெரிவிக்க அதிகாரிகளை விட்டு மக்களைப் பலவந்தமாகக் கவர்னர் மாளிகைக்குக் கொண்டு வரச் செய்து, குறைந்த பட்சம் கூட்டு சர்க்கார் அமைக்கலாமென்ற எண்ணத்தை உண்டாக்கினார். அதையே கேட்கும்படி பக்கிரிசாமி பிள்ளைக்கும், துக்கேயுக்கும் யோசனை சொல்லியிருக்கிறார்.

இந்த மேனுர்டும், கொய்பாரும், மற்றும் பிரான்சின் அதிகாரிகள் சுமார் 50 பேர்களும் தான் 6,000 மைல்களுக்கு அப்பாலிருக்கும் பிரான்சிலிருந்து பரந்த இந்தியாவிலிருக்கும் மிகச் சிறிய துண்டான பிரெஞ்சிந்தியாவை, பல்லாலும், நகத்தாலும் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கின்றனர்.

பிரெஞ்சுக்காரர்கள், எவரும் பிரெஞ்சிந்தியாவில் குடியேறியிருக்கவில்லை; இந்திய மக்களின் மொத்தத் தொகையில், குறைந்தபட்சம் 5 சதவிகிதமாவது, பிரான்சு மக்கள் இங்கு வாழ்ந்து வந்தால் அவர்கள் பாதுகாப்புக் காகவாவது கூட்டு சர்க்கார் நிறுவ அவசியம் என்று சொல்லலாம்; அப்படியும் இல்லை; இங்குள்ள 3 லட்சம் இந்திய மக்களுக்கு 50 பேர்களே வெள்ளை அதிகாரிகள்; அவர்களும் நிரந்தரமானவர்கள் அல்ல. இந்த நிலையில் யாரைப் பாதுகாக்க பிரான்சு கூட்டு சர்க்கார் நியமிக்கப்போகிறது என்பது நமக்குத் தெரியவில்லை; இது வெறும் கேலிக்கூத்தேயாகும். இது பிரெஞ்சு ஆதிக்கம் இந்தியாவில் காலம் கடந்த புதுமுறையாகும்.

நியாய புத்தியும், மனச்சாட்சியும் உடையவர்களாக இருப்பின் இந்த உண்மையை நிச்சயமாக ஒப்புக் கொள்வார்கள்."

நீர்வளிக் குண்டுப் பரிசோதனைகள்

'இந்தியாவைப் பாதிக்கவில்லை!'

புதுடில்லி, ஏப். 28—

"பசிபிக் மகா சமுத்திரத்தில் நடத்தப்பட்டுவரும் நீர்வளிக் குண்டு பரிசோதனைகளால் இந்தியாவிற்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுவது உண்மைதானா?" என்று, இந்திய மேல் சபையில் கேட்கப்பட்ட கேள்விக்கு, "சர்க்காருக்குத் தெரிந்தவரையில், பசிபிக் மகா சமுத்திரத்தில் நீர்வளிக் குண்டுகள் பரீட்சார்த்தமாக வெடிக்கப்பட்டதால் தீய விளைவுகள் எவையும் இந்தியாவில் ஏற்படவில்லை," என்று பதிலளிக்கப்பட்டது.

பற்றாக்குறை பகுதிக்கு உணவுத் தானியம்

புதுடில்லி, ஏப். 28—

மத்திய உணவு-விவசாய மந்திரி காரியாலயம், 1954 ஏப்ரல் 15-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில், நாட்டில் உள்ள பல்வேறு பற்றாக்குறைப் பிரதேசங்களுக்கு மொத்தம் 52,700 டன் உணவுத் தானியம் அனுப்பியிருக்கிறது.

இதில் பிரதானமாக, பம்பாய்க்கு 10,000 டன்னும், மேற்கு வங்காளத்துக்கு 9,650 டன்னும், சென்னைக்கு 6,900 டன்னும், டில்லிக்கு 6,050 டன்னும், பீகாருக்கு 8,500 டன்னும், திருவாங்கூர்-கொச்சிக்கு 3,500 டன்னும் கிடைத்தது. இதர எல்லாப் பிரதேசங்களுக்கும் மொத்தம் 13,100 டன் கிடைத்தது.

திருவாங்கூர்-கொச்சிக்கு நிதி உதவி

திருவாங்கூர் - கொச்சி மாநிலத்தில் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்காக, அந்த மாநில சர்க்காருக்கு நடப்பு ஆண்டில் ரூ 275 லட்சம் கொடுத்தவ மத்திய சர்க்கார் வாக்களித்துள்ளனர்.

சேலம் அழைக்கிறது!

★

உலக பாட்டாளி மக்களின் விடுதலை தினமாகிய வருகிற மே திங்கள் முதல் நாளன்று சேலம் மாவட்ட தி. மு. கழக 2 வது மாநாடுகள் நடைபெற விருக்கின்றன. தனி நாடு கேட்டு, புது வாழ்வு பெற்று இந்நாட்டு மக்கள் புகழுடன் வாழ வேண்டுமென விரும்பும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். சீமான்களின் கோட்டையில் தளர் நடையுடன் தள்ளாடி நடந்த பகுத்தறிவு இயக்கத்தை மக்கள் கூடாரமாய் மாளிகை முதல் மண் குடிசை வரை ஏறுநடை போடச் செய்து திராவிடத்தின் சரித்திரத்தில் ஒரு புதிய பொன்னான அத்தியாயத்தை உண்டாக்கியது சேலம் நகரம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்ப்பதிலும் அது நடத்திய விடுதலை போராட்டங்களில் பெரும் பங்கு கொண்டு ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களை சிறைக்கனுப்பிய பெருமை கொண்டது சேலம் மாவட்டம். அதன் பூமிக்குள்ளே புதைந்து கிடக்கும் பொருள்கள் ஏராளம். அந்த மாவட்டம் மே 1, 2 தேதிகளில் மாநாடுகள் நடத்துகிறது.

காலம் சென்ற அரூர் இயக்கத் தோழர் அருமை நண்பர் பாகுராமன் பெயரில் அமைக்கப்பட்டிருக்கும் அழகான மந்தல், காலம் சென்ற சேலம் தோழர் உழைப்பின் சிகரம் வள்ளியப்பன் பெயரில் அமைந்து உங்களுக்கெல்லாம் கருத்துச் சோலையாய் விளங்கும் அரங்கம்.

திராவிடத்தின் அரசியலிலே கொந்தளிப்பு குல முறைக் கல்வித் திட்டம், வஞ்சத்தின் மஞ்சனையாய் விளங்கும் ஐந்து ஆண்டுத் திட்டம், அறிவின் தூதுவர்களை அலட்சியமாய்ப் பேசும் அரசியல் எத்தர்கள். இவற்றிலிருந்து நாம் மீளவேண்டும். அதற்கு வழிகாண வேண்டும். சேலம் நோக்கி வருவீர்! கருத்துச் சோலையில் உலவுவீர்!! நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி நடிக்கும் அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்தோவியங்கள் "காதல் ஜோதி" "ஓர் இரவு" நாடகங்கள் உங்களைக் களிப்பூட்டும்.

மாநாட்டின் ஏற்பாடுகளை வரவேற்புக் குழுவினர் சிறந்த முறையில் செய்து வருகின்றனர். தி. மு. கழகத்தின் சொற்பொழிவாளர்கள் சிறந்த தலைப்புகளின் கீழ் சொற்பொழிவாற்றுவார்கள். மாநாட்டிற்கு வரும் தோழர்களுக்கு உணவு வசதிகள் பந்தலுக்குள்ளும் வெளியிலும் சிறந்த முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கருத்தறிந்து கழகத் தோழர்களுக்கு உதவிபுரியும் தொண்டர்படைத் தயாராகிவிட்டது. என் எஸ். பதி அண்டு கம்பெனியாரின் ஒளி அமைப்பும், ராஜா சவுண்ட் சிஸ்டத்தாரின் ஒலி அமைப்பும் கண்ணையும் கருத்தையும் கவருவனவாய் உள்ளன.

இயக்கத் தோழர்களே! திராவிடத்துச் செம்மல்களே!! சிறையிலே நமது தூத்துக்குடி தோழர்கள் வாடுகின்றனர். அவர்கள் விடுதலைபெற வேண்டும். அதற்கான வழிகாண வாரீர். திராவிடத்தின் விடுதலைக்கு புதுப் பாதைக் காண்போம் வருவீரென அன்புடன் அழைக்கின்றோம்.

—வரவேற்புக் குழு

கண்ணதாசன்—தர்மலிங்கம் ஜாமீனில் விடுதலை

— (:) —

மற்றவர்களும் விரைவில் விடுதலையாவர்

சென்னை, ஏப். 27—

கல்லக்குடி வழக்கில் மூன்று ஆண்டு காலம் தண்டனை ஏற்றுத் திருச்சி சிறையில் சென்ற இரண்டு மாத காலமாக இருந்துவந்த தோழர்கள் பதினெட்டுப்பேரில் தோழர்கள் கண்ணதாசன், தர்மலிங்கம் ஆகிய இருவரும் 26—4—54 திங்கள் மாலை 6 மணிக்கு ஜாமீனில் விடுதலையானார்கள். தோழர் தர்மலிங்கம் அவர்கள் ஒரு மாத காலமாக ஆஸ்பத்திரியில் இருந்து, ஆஸ்பத்திரியில் இருந்தபடியே விடுதலையானார். மற்ற தோழர்கள் அடுத்து விடுதலை செய்யப்படுவார்கள்.

கல்லக்குடி வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதும், அதன் காரணமாகவே கல்லக்குடி அறப்போரில் ஈடுபட்ட வீரர்கள் இப்பொழுது ஜாமீனில் விடுதலை செய்யப்படுகிறார்கள் என்பதும் வாசகர்கள் அறிவார்கள்.

இன்று காலை சென்னை வந்து சேர்ந்த தோழர் கண்ணதாசன், பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்களைக் கண்டு திருச்சி சிறை வாழ்வைப் பற்றியும், மேற்கொண்டு வழக்கு சம்பந்தமாக எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் சுமார் 1 மணி நேரம் பேசியிருந்துவிட்டுச் சென்றார். (ந. நி)

படித்தவர்க்குப்பணிதரும்ஏற்பாட்டினால் 11 மாநிலங்கள் பயனடைந்தன

—]o[—

இத்துறையிலும் சென்னை மாநிலம் புறக்கணிக்கப்பட்டது

புதுடெல்லி, ஏப். 26—

படித்து வேலையில்லாது கஷ்டப்படுவோருக்கு உதவி செய்யும் வகையில் யூனியன் சர்க்கார் ஓரே ஆசிரியரைக் கொண்ட பள்ளிகளைத் தேச முழுவதும் திறப்பது என திட்டமொன்றை தீட்டி இருந்தது. அதன்படி, மூடப்பட்டுள்ள பள்ளிகளைத் திறந்தும், புதுபள்ளிகளைத் துவக்கியும் படித்தவர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறது யூனியன் சர்க்கார். அதன்படி 8 469 பள்ளிகள் 11 மாநிலங்களில் திறக்கப்பட்டிருக்கின்றன.

பம்பாய்-1,501, மணிப்பூர் 50, ஐதராபாத்-406, விந்திய பிரதேசம்-200 சவுராஷ்டிரம்-250, ராஜஸ்தானம்-500 பீகார்-2 500, பஞ்சாப்-1 000, பெப்சு-700, போபாலும் மேற்கு வங்கமும் சேர்ந்து-1,287.

சென்னை மாநிலத்திற்கு, இந்த ஏற்பாட்டின் பங்கு இல்லாமல் போய்விட்டது ஏன்? சென்னையில் இனி படிக்க வேண்டியவர்களே கிடையாது என்றோ, படித்து வேலை கிடைக்காமல் திண்டாடுகிறவர்கள் கிடையாது என்றோ யூனியன் சர்க்கார் கருதிக்கொண்டு இருப்பதாகச் சொல்ல முடியாது. சென்னையை அலட்சியப்படுத்தினாலும் கேட்பவர் இல்லை என்று யூனியன் சர்க்கார் கொண்டுள்ள நெஞ்சுரம்தான் இதற்குக் காரணம்.

மொழிவழி மக்கள் கணக்கெடுப்பு!

சென்னையில் தலைமலகம்

கர்நூல், ஏப். 27—

சித்தூர் மாவட்டத்திலுள்ள ஆந்திரா, சென்னை எல்லையிலுள்ள கிராமங்களில் மொழி வாரியாக எவ்வளவு பேர் உள்ளனர் என்பதைக் கணக்கெடுக்க இந்திய சர்க்கார் மக்கள் தொகை கணக்கெடுப்பு இலாகா சென்னையில அடுத்த மாதம் 15-ம் தேதி ஒரு அலுவலகம் ஏற்படுத்தும்.

கல்லக்குடி தி. மு. கழகம்

25—4—54 அன்று மாலை 6 மணிக்கு தி மு கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் கெ. மதிவாணன் தலைமையில் கூடி 1954—55-ம் ஆண்டுக்கு நிர்வாகிகளை தேர்ந்தெடுக்கப்பட்டனர்:- செயலாளர்; ஏ. தம்புசாமி; துணைச் செயலாளர்: ஆர். மாணிக்கம்; மாவட்டப் பிரதிநிதி: சுப்பான்; கிளம்பர உறுப்பினர்: வரதராசன்; பொருளாளர்: கெ. மதிவாணன்; செயற்குழு உறுப்பினர்கள்: கோவிந்தன, நடேசன், ராமமூர்த்தி சம்மந்தம், மகியஞானம், மாயாண்டி, சுந்தரம், ராமகுட்டி, முத்துச்சாமி.

கல்லக்குடி, அத்தைக்குடி அறப்போராட்டத் தோழர்களின் வழக்கை வாபஸ் வாங்கும்படியும், புதிய கல்வித் திட்டத்தை வாபஸ்பெறும்படி முதல் மந்திரியைக் கேட்டுக்கொண்டும், டால்மியாபுரம் என்பதற்குப் பதில் கல்லக்குடி என்று ரெயில் டிக்கட்டுகளில் அச்சிடுமாறு மத்திய சர்க்கார் ரெயில்வே அமைச்சரை கேட்டுக்கொண்டும். மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அவர்கள் பெறும் கல்வி!

ஸ்ரீநகர், ஏப் 29—

இங்கு, பத்திரிகைகளில் வெளிவந்துள்ள குறிப்புகளில், "காஷ்மீர் மாணவர்கள், ஒரு வருடத்தில் 2 மாதம் 18 நாட்களே கல்வி பயிலுகின்றனர்" என்று கூறுகின்றனர்.

"விடுமுறை நாட்களைக் காட்டிலும், கல்வி பெறும் நாட்களே அதிகமாக இருக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டுவிட்டு, ஒரு நிருபர் கீழ்க்கண்ட விபரங்களை வெளியிட்டுள்ளார்.

மழைகால விடுமுறை 2 மாதம் 7 நாட்கள்; கோடைகால விடுமுறை 15 நாட்கள்; ஞாயிற்றுக்கிழமைகள் 52; கடவுள் வழிபாட்டிற்காக, வெள்ளிக்கிழமைகளில் நாலில் மூன்று பகுதி, பள்ளிகளுக்கு வெளியே செலவிடுதல் 39 நாட்கள்; உல்லாசப் பிரயாணம் போட்டிப் பந்தயங்கள் முதலியன 15 நாட்கள்; அரை வருடப் பரீட்சை விடுமுறை 15 நாட்கள்; வருடாந்திர பரீட்சைகள்—முடிவுகள் முதலிய விடுமுறைகள் 30 நாட்கள்; சர்க்கார் விடுமுறை நாட்கள் 45"

ஆக இப்படி விடுமுறை நாட்களின் மொத்தம் 9 மாதம், 12 நாட்கள் என அந்த நிருபர் கூறியுள்ளார்.

திருச்சிராப்பள்ளியிலிருந்து சிங்கப்பூர் செல்லும் பிரயாணிகள் மீதுபதில் விதிக்கப்பட்டிருந்த காலராத் தடைக்கட்டுப்பாடுகளை, சிங்கப்பூர் சுகாதார அதிகாரிகள் ரத்து செய்து விட்டதாக, புதுடில்லியிலுள்ள சுகாதார சர்வீசுகள் டைரக்டர் ஜெனரலுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

தாயகத்தை மீட்க......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

—இதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் உங்களைக் கேட்கிறது.

திராவிடத் தொழிலாளர்களே! உழைத்து உழைத்து உருக்குலைந்து— இரத்தத்தை வியர்வையாக்கி பாடுபடும் பாட்டாளி வர்க்கமே! உன் உழைப்புக்கு இந்த நாடு அளித்த பரிசு என்ன? அரை வயிற்றுக் கஞ்சும், ஆதரவற்ற வாழ்வும்தானே? ஆகவே தான் உங்களையும் அழைக்கிறோம், திராவிடத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு! வருக, வருக! திராவிடத்தின் பெருங்குடி மக்களே, வருக!

நாட்டின் விடுதலைப் போருக்கு வீரர் படை மட்டும் போதாது; விவேகிகள் படையும் தேவை! வீரர் படை இன்று அணிவகுத்து நிற்கிறது! எதிர்கால விவேகிகள் படையாக நீங்கள் உருவாக வேண்டும்.

காங்கிரசும் விடுதலைப்போர் நடத்தியது! ஆனால், அதிலே வீரர்கள் படை மட்டும்தான் இருந்தது. விவேகிகள் படையிலை! ஆகவேதான் பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்ற முடியவில்லை அக்காங்கிரசால்! ஆகவேதான் காங்கிரசில் இல்லாத ஒரு தேஷ்முக்கையும் காங்கிரசை எதிர்த்து நின்ற ஒரு சண்முகம் செட்டியாரையும், ஒரு ஜான் மத்தாயையும் நிதி மந்திரிகளாக நிறுத்துகிறது!

"காங்கிரசில் காண முடியாத அந்த விவேகிகள் படை நமது இயக்கத்திலே உருவாக வேண்டும் தோழர்களே! திராவிடம் மீண்டால் — கருணாநிதிதான் பல கூட்டங்களிலே பேசியிருக்கிறாரே, அவரையே சீனாவின் தூதராக அனுப்பிவிடலாமென்று முடிவு செய்ய முடியுமா? முடியவே முடியாது! ஒரு நாட்டின் தூதுவர் என்றால் அதற்குரிய தகுதி, திறமை வேண்டாமா? அதற்கொரு படை வேண்டும்; அதுதான் விவேகிகள் படை! அந்த விவேகிகள் படையாக நீங்கள் வாருங்கள்! வீரர்கள் படையோடு சேர்ந்து வளருங்கள்!

மாணவர்கள் இந்த உண்மையை உணர வேண்டும்! ஆகவேதான், அரசியலை கவனிப்பதோடு நிறுத்திக்கொள்ளுங்கள்—கவனிக்காமலும் இருந்துவிடாதீர்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கேட்டுக் கொள்ளுகிறது!

100 வருட உலக யுத்தம்!

அமெரிக்க செனேட்டர் எச்சரிக்கை

வாஷிங்டன், ஏப். 26—

அமெரிக்க செனேட் சபையில் பேசுவதற்காக தான் தயாரித்துள்ள பேச்சு ஒன்றில் செனேட்டர் எட்வின் ஜான்சன் என்பார், கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்.

"இந்தோ சீன விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீடு குறைந்தது 5 லட்சம் அமெரிக்கரின் உயிரையாவது குடிக்கும். அமெரிக்கத் துருப்புக்களை இந்தோசீனாவிற்கு, கணக்கிடப்படாத முடிவுகளுக்காக, கணக்கற்ற செலவு செய்து அனுப்புவதென்பது, அமெரிக்க சரித்திரம் கண்டிராத, முட்டாள்தனமான அணிச்சலுடன் செய்யப்படுவதாகும்.

இப்படி ஒரு யுத்தம் துவங்கினால் அது 10 ஆண்டுகளுக்கு நீடிக்குமோ, அன்றி செற்றியின்றியே, உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் பரவி, 100 ஆண்டுகள் நடைபெறும் உலக யுத்தமாகவும் கூடும்.

கம்யூனிஸ்டுகளின் அனைப்பிலே பழுப்பு, மஞ்சள் இனங்களைத் தாக்கி, வெள்ளை இனத்திற்கு எதிராக உருவாகியுள்ள உறுதியுள்ள முன்னணியுடன், எல்லா நாகரீகங்களையும் அழித்து விடுகிற ஒரு வாழ்வு சாவுப் போராட்டத்தில் ஈடுபடுத்தும் அந்த உலக யுத்தம்.

திட்டக்குடி தி. மு. கழகம்

24—4—54ல், திட்டக்குடி தி. மு. மாணவர் கழக ஆண்டு விழா தோழர் சிங்காரம் தலைமையில் நடைபெற்றது. தோழர் சுரூர் மாணிக்கம் கொடியேற்றி வைத்தார். தோழர் ஈரோடு அப்பாவு பேசியபின்னர், தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள் நேரு தில்லையில் பேசியதைக் கண்டித்து 2 மணி நேரம் பேசினார். பின்னர், புதிய கல்வித் திட்டத்தை வாபஸ்பெறுமாறும் தமிழை ஆட்சி மொழியாக்கும்படியும் சென்னை அமைச்சரவையைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முத்தம் கொடுத்தவள் — உயிரைப் பிரிந்தாள்!

கணவனுக்கு ஐந்து ஆண்டு சிறை

ஜபல்பூர், ஏப். 25—

காலை முதல் மாலை வரை கடுமையாக உழைத்துவிட்டு களைப்போடு வீடு திரும்பிய கணவனை கட்டி முத்தமிட்டு வரவேற்றாள் மனைவி. அவளது செய்கையை எதிர்பார்க்காத கணவன் ஆத்திரப்பட்டு அவளையே கொன்றுவிட்டான்.

கொலை குற்றம் சாட்டப்பட்டு நீதிபதியின் முன் நிறுத்தப்பட்டபோது "துரதிருஷ்டம் மிக்க அந்தப் பெண்ணின் அன்புச் செய்கை, எனக்கு ஆத்திர மூட்டுற்று. மேலும் ஆதிவாசிகளின் அவனுக்கு பழக்கத்திற்கும் அது உகந்ததல்ல" என்று கூறினான்.

ஒரு மனைவி, தன் கணவனை முத்தமிடுவது தவறு அல்ல ஆத்திர மூட்டக்கூடியதும் அல்ல என்ற சர்க்கார் தரப்பு வழக்கறிஞரின் வாதத்தை ஏற்க, அசெசர்கள் மறுத்து, அச்செய்கை ஆத்திர மூட்டக்கூடியதே என்று தீர்ப்பளித்தனர். அவனுக்கு 5 ஆண்டு சிறைத்தண்டனை தரப்பட்டது.

கணவனை அன்புடன் தழுவி ஆசை முத்தம் தந்து வரவேற்றதற்குப் பரிசாக சாவு கிடைத்தது அவளுக்கு. 5 ஆண்டுச் சிறைவாசம் கிடைத்தது

★★

சேலம் மாவட்ட தி. மு. க. மாநாடுகள்

சேலம் V. மார்க்கெட்டில் அமைந்துள்ள பாசுராமன் பந்தலில் — வள்ளியப்பன் அரங்கில் நடைபெறும்.

மே 1: சனிக்கிழமை	மே 2: ஞாயிற்றுக்கிழமை
சமுதாய சீர்திருத்த மாநாடு	**அரசியல் மாநாடு**
தலைவர்: தோழர் ப. உ. சண்முகம்	தலைவர்: தோழர் இரே. இளம்வழுதி, M.A., B.L
துவக்குபவர்: தோழர் கோகுல கிருஷ்ணன், B.A., B.L.	துவக்குபவர்: மதுரை தோழர் எஸ். முத்து

மற்றும் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களும், இயக்க முன்னணி வீரர்களும் கலந்துகொள்வார்கள்

★

இரு நாட்களிலும் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி குழுவினர் நடிக்கும் 'காதல் ஜோதி,' 'ஓர் இரவு' நாடகங்கள் நடைபெறும்

கட்டணம்:—வரவேற்பாளர் ரூ. 5; பிரதிநிதி: ரூ. 3; ஆதரவாளர்: ரூ. 2; பார்வையாளர்: ரூ. 1; பெண்கள்: அணா 8.

—வரவேற்புக் குழுவினர்.

★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குளிக்காரபண செட்டித் தெரு இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,